செய்தி வெளியீடு எண்.877 நாள்.20.10.2008

# கரும்புக்கு அரசின் பரிந்துரை விலை
# முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

**2008–2009ம் அரவைப் பருவத்தில் 9 சதவீதம் சர்க்கரை கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்புக்கு மத்திய அரசு ரூ.811.80 எனக் குறைந்த பட்ச விலையாக நிர்ணயம் செய்துள்ளது.**

**தமிழகத்தில் உள்ள கரும்பு விவசாயிகளின் கோரிக்கையினையேற்று, தி.மு.க அரசு மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்த பட்ச விலையை விட கூடுதலாக ரூ.238.20 உயர்த்தி 9 சதவீதம் சர்க்கரை கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூ.1050/– என்று நிர்ணயம் செய்து அறிவிக்கிறது.**

**இந்த விலை உயர்வு 1.10.2008 முதல் தொடங்கி உள்ள நடப்புக் கரும்பு ஆண்டில் ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்ட கரும்புக்கும் பொருந்துமாறு முன்தேதியிட்டு வழங்கப்படும். மேலும் 9 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானத்துக்கும் கூடுதலாக உள்ள ஒவ்வொரு 0.1 சதவீத சர்க்கரைக் கட்டுமானத்துக்கும் டன் ஒன்றுக்கு ரூ.9/– ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.**

---

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.